10th August 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பொதுவான கேள்வி. மதுரை சம்பந்தமாக வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

புலவர் கா. கோவிந்தன் : பொதுவாக நிலக் குடியேற்ற காலனி களில் நில உரிமை அந்த மெம்பர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ராணுவத்தினர்களுக்கு உரிமையாக்கப்படாத காரணத்தினால் சில விடங்களில் அவை பயன்படுத்தாத நிலைமை ஏற்படுகிறது. சர்க்கார் அதற்கு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் பலவிதமான அமைப்புகள் இருக்கின்றன. சில இடத்திலே நிலத்தை சொஸை டிக்குக் கொடுத்திருக்கிறார்கள். சில இடத்திலே நிலத்தை மாஜி ராணுவத்தினருக்குக் கொடுத்திருக்கிறார்கள். எந்த எந்த இடத் தில் எந்தவிதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு தனித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Electricity Sub-Division Office at Vedasandur

* 168 *Q.*—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to open a Sub-Divisional Office of the Madras State Electricity Board at Vedasandur to facilitate better operation and maintenance and construction works?

THE HON. SRI R. VENKATARAMAN : A proposal to form an additional construction sub-division at Vedasandur for the execution of the electricity Schemes in that area is under the consideration of the Madras State Electricity Board.

Mettur Tunnel Hydro-Electricity Scheme

* 169 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the progress made in the Mettur Tunnel Hydro-Electricity Scheme; and

(*b*) when the scheme will be completed?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The first generating unit of 50 M.W. is proposed to be commissioned in August 1965. The other three units of 50 M.W. each are expected to be commissioned one by one at intervals of three months from August 1965.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மேட்டூர் டன்னல் திட்டத்தில் பென் ஸ்டாக்குகளை அமைப்பதில் நீர்க்கசிவு ஏற்பட்டு அதனாலே 600 ஹார்ஸ் பவர் உள்ள இயந்தி ரங்களை வைத்து நீர் இறைக்கப்பட்டதும், தூத்துக்குடியிலிருந்து

[10th August 1965

டைவர்ஸ் வரவழைத்து தண்ணீர் இறைக்கப்பட்டதும் உண்மையா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நீண்ட பென்ஸ்டாக் அங்கே கிடையாது. டன்னலிலிருந்து நேராக வருவதுதான். நான் இதைப் பற்றி எலக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட் விவாதத்தின்போதே சொன்னேன். இந்த டன்னல் 45 அடி டயமீட்டர் உள்ள, உலகத்தி லேயே இரண்டாவதாக உள்ள பெரிய டன்னல். இவ்வளவு பெரிய டன்னலிலே நீர்க்கசிவு ஏற்படுவது சாதாரணமான விஷயம்தான். பெரிதல்ல, புதியதல்ல.

திரு. வை. சங்கரன் : இதிலே கிடைக்கும் சக்தியானது சிலனல் பவராக இருக்குமாதலால், கனெக்ஷனும், சீலனல் கனெக்ஷனைக் கொடுப்பதற்கு உத்தேசமிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இவையெல்லாம் மெட்ராஸ் கிரிட்டிலே சேர்க்கப்படுகிறது. டிஸ்ட்ரிபியூஷன் கிரிட்டிலே சேர்க்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மேட்டூர் அணை உடைந்து விடும் என்ற பொதுவான உணர்ச்சி இருந்துவருகிறது. இதற்குக் காரணமாக இருந்த 30, 40 அதிகாரிகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தார்களே, அப்படியிருக்கும்பொழுது இது சாதாரண விஷயம் என்று அமைச்சர் அவர்கள் எப்படி சமாதானம் கூறுவார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வெகு சாதாரண விஷயம். டெக்னிகாலிட்டிஸ் தெரிந்தவர்களுக்கு இது நன்றாகப்புரியும். பெரிய டன்னலிலே நீர்க்கசிவு ஏற்படுகிறது வழக்கம். இதற்காக மறுபடியும் க்ரௌட்டிங் செய்து கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இது சம்பந்தமாக படேல் கம்பெனி யார் கான்ட்ராக்ட் எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் செய்த வேலைகள் குறைபாடுகள் இல்லாமல் சரியாக இருக்கின்றன. ஆனால் மற்றவர்களிடம் கொடுத்த கான்ட்ராக்ட் வேலைகள்தான் சரியாக செய்யப்படவில்லை, குறைகள் இருப்பதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்வது தவறு. இரண்டு கான்ட்ராக்டர்களிடம் விடப்பட்டது, ஒன்று பட்டேல் கம்பெனி, மற்றொன்று சுப்பிரமணியம் கம்பெனி. இவர்கள் செய்த இரண்டு வேலைகளிலும் நீர்க்கசிவு ஏற்பட்டிருந்தது. அவைகளுக்கு க்ரௌட்டிங் செய்தார்கள்.

Supply of Electricity in Nallur, Vriddhachalam Taluk

* 170 Q.—Sri K. NARAYANASWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of villages to which supply of electricity has been provided in Nallur Constituency of Vriddhachalam taluk; **and**